முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 179/2021

2024-ம் வருடம் மார்ச் மாதம் 14-ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873-ம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர்: ராமுகண்ணு (வா.சா.1) தொழில்: விவசாயம்

த/பெ: முத்துச்சாமி இனம்: ஆண்

கிராமம்: வத்தக்கவுண்டன்வலசு, பழனி வயது: 43

மாவட்டம்: திண்டுக்கல் நாள்: 14-03-2024

முதல் விசாரணை:

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

நான் வாதி ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. 03.11.2017 தேதி நானும், பிரதிவாதியும் செய்துகொண்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரம் அசல் வா.சா.ஆ.1. 28.10.2020 தேதி எனக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட கால நீட்டிப்பு பத்திரம் அசல் வா.சா.ஆ.2. 24.10.2013 தேதிய பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.3. 16.02.2021 தேதி நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.4. அதனை பிரதிவாதி பெற்றுக்கொண்டதை காண்பிக்கும் Track consignment ஆன்லைன் நகல் வா.சா.ஆ.5. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை: ஒத்திவைக்கப்படுகிறது.

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.03.15 10:24:55 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.